வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 31.12.2025 புதன்கிழமை இதழ் : 365 பக்கங்கள் : 08

# தையிட்டி விகாரை காணிகளை உரிய மக்களிடமே வழங்குங்கள்

**யாழ். நாக விகாரை விகாராதிபதி**



**காணிகள் மக்களுக்கே சொந்தம் என்பது குறித்து அரசாங்க தரப்புகளுக்கும் தெளிவுபடுத்தியுள்ளேன்**

யாழ்ப்பாணம், டிசெம்பர் 31

"தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள பொதுமக்களின் காணிகளை மீண்டும் அவர்களிடமே வழங்க வேண்டும்" - இவ்வாறு யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி விமலதர்ம தேரர் தெரிவித்துள்ளார்.

"தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகள் தனியார், பொதுமக்களுக்கு சொந்தமானவை என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை", என்றும் அவர் கூறியுள்ளார்.

பேரிடரால் பாதிக்கப்பட்டவர்கள் ஆத்ம சாந்திக்காகவும் பாதிக்கப்பட்டவர்கள் குணமடைய வேண்டியும் சர்வமத பிரார்த்தனை நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நாக விகாரையில் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிம்போதே விமல தர்ம தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

07



வைகுண்ட ஏகாதசி தினமான நேற்று யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை வேங்கடேச பெருமாள் ஆலயத்தில் பரமபத வாசல் திறக்கப்பட்டு சுவாமி எழுந்தருளியபோது...

## புதுப்பிக்கப்பட்ட திட்டங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்

**அரச அலுவலர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து**

கொழும்பு, டிசெ. 31


2026ஆம் ஆண்டில் இலங்கையை பொருளாதார வெற்றிக்குக் கொண்டுசெல்ல அனைத்து அரச அலுவலர்களும் புதுப்பிக்கப்பட்ட திட்டங்களுடன் இணை ந்து செயல்பட வேண்டும் - என்று

07

## தையிட்டி விகாரை சட்டவிரோதம் என்று தீர்ப்பளித்தால் ஏற்க தயார்

**விகாராதிபதி நந்தாராம தேரர் தெரிவிப்பு**

● புதிய கட்டுமானம் எதுவும் நடைபெறாது



த. பிரதீபன்

யாழ்ப்பாணம், டிசெ. 31

"தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகள் மக்களுக்கு சொந்தமானவை. அங்கு விகாரை அமைக் கப்பட்டது சட்டவிரோதம் என்று

07

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக 3ஆம் திகதியும் போராட்டம்!

**காணிகளை இழந்த மக்கள் அழைப்பு**

யாழ்ப்பாணம், டிசெ. 31

"எமது காணிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையில் மீண்டும் புத்தர் சிலை வைக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி போராட்டம் நடைபெறும். இதில் அனைவரும் பங்கேற்க வேண்டும்", என்று திஸ்ஸ விகாரையால் காணிகளை இழந்தவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் ஊடக

07

## மகனை தேடிய தந்தை மரணம்

வவுனியா, டிசெ. 31

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத்தேடி வந்த தந்தை ஒருவர் உடல்நலமற்று உயிரிழந்தார்.

வவுனியா - சின்னத்தம்பனை - நேரியகுளத்தைச் சேர்ந்த வையாபுரி சந்திரன் (வயது 69) என்பவரே இவ்வாறு

07

## டக்ளஸ் தேவானந்தா மருத்துவமனையில்!

கொழும்பு, டிசெ. 31

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

டக்ளஸ் தேவானந்தாவின் உடல்நிலையை கருத்தில் கொண்டு மருத்துவரின் ஆலோசனைக்கு அமைவாக அவர் மஹர சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தனக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட துப்பாக்கியை பாதாள உலகக் குழுவினரிடம்

07

## ஈ. பி. டி. பி செய்த கொலைகள், கடத்தல்களும் அம்பலமாகும்!

**ரஜீவன் எம். பி. தெரிவிப்பு**

சி.தில்லைநாதன், பு.கஜிந்தன்

வடமராட்சி, டிசெ. 31

"ஈ. பி. டி. பி. செய்த கொலைகள், கடத்தல்கள், கப்பம், ஊழல்களும் விரைவில் அம்பலத்துக்கு வரும். நீதித்துறை அதனைச் செய்யும்" - இவ்வாறு ஆளும் தரப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் சமூக அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களுக்கான

07

## நான் பொய் கூறியே அரசிடம் ரூ. 50,000 இழப்பீடு பெற்றேன்

**அபிவிருத்தி குழு கூட்டத்தில் அர்ச்சுனா எம். பி. தெரிவிப்பு**

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 31

"நான் பழைய ஐபாட் ஒன்றை தண்ணீர் போனதாகக் கூறி அரசாங்கத்திடமிருந்து 50 ஆயிரம் ரூபாய் வாங்கியுள்ளேன். நாங்கள் பொய் கூறி வாங்குகிறோம். நீங்களும் பொய் கூறியாவது வாங்குங்கள்", என்று பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேச அபிவிருத்தி

07

## பல்கலை ஆசிரியர் சங்கங்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 31

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உட்பட நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களின் ஆசிரியர் சங்கங்கள் நேற்று பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக சட்டங்களை மாற்ற அரசாங்கம் முயற்சிக்கிறது என்றும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்றைய தினம் இந்த ஒருநாள் அடையாள பணிப் புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடந்த போராட்டத்தில் பங்கேற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்

07

## சஜித்துடன் ஐ. தே. க.வின் முக்கியஸ்தர்கள் சந்திப்பு



கொழும்பு, டிசெ. 31

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர்கள் நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் ருவான் விஜயவர்த்தன, அகில விராஜ் காரியவசம்,

07

## பிரதேச சபை உறுப்பினர் கஞ்சாவுடன் நேற்று கைது

யாழ்ப்பாணம், டிசெ. 31

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் 4 கிலோ கஞ்சாவுடன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.




வெளிநாட்டிலிருந்து வந்த உத்தரவுக்கு அமைவாக வேறு ஒருவருக்கு கைமாற்றுவதற்காக கஞ்சாவை கடத்திச் சென்றபோதே யாழ்ப்பாணம் பொலிஸார் அவரைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக நல்லூர் சங்கிலியன் தோப்பு

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகுண்ட ஏகாதசி தினமான நேற்றைய தினம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நடைபெற்ற தேர்த் திருவிழாவின்போது...

# பௌத்தமயமாக்கலை நிறுத்துக வவுனியாவில் நேற்று போராட்டம்

வவுனியா, டிசெ. 31

வவுனியா உட்பட வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தால் நேற்று செவ்வாய்க்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

தையிட்டியில் அமைதிவழியில் போராடியவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு போராட்டக்காரர்கள் கண்டனம் தெரிவித்தனர். அத்துடன், வவுனியா உட்பட வடக்கு, கிழக்கில் புதிதாக அமைக்கப்படும் விகாரைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேலும், "சட்டவிரோதமாக தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராடியவர்கள் மிலேச்சத்தனமாக கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு மதகுரு என்றுகூட பாராமல் மோசமானமுறையில் வேலன் சுவாமி நடத்தப்பட்டிருந்தார். இது, தமிழ் மக்கள்மீதான ஓர் அடக்குமுறை செயல்பாடு. வடக்கில் குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, தையிட்டி, தற்போது வவுனியா - கல்லுமலை என்பன ஆக்கிரமிப்புகளால் பாதிக்கப்பட்டுள்ளன. பௌத்த துறவிகளே இப்படியான கலவரங்கள் ஏற்படுவதற்கு தூண்டுகோலாக உள்ளனர். மறுக்கப்படும் எமது உரிமைகளை அடைவதற்காக நாம் தொடர்ச்சியாக போராட்டங்களை செய்வோம்", என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ஐ-10)





# பேரிடரில் உயிரிழந்தோருக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், டிசெ. 31

டித்வா சூறாவளியால் உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வும் பிரார்த்தனையும் நேற்று யாழ்ப்பாணம் நாக விகாரையில் நடை பெற்றது.

யாழ். மாவட்ட சர்வதேச பேரவையின் ஏற்பாட்டில் முன்னெடுக் கப்பட்ட இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களுக்காக தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து, அவர்களின் ஆத்ம சாந்தி வேண்டியும், பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடைந்து மீளவும் கூட்டுப் பிரார்த்தனையும் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வு புயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான அஞ்சலியும் பிரார்த்தனையும் புதிய ஆண்டில் பொறுப்புடன் நடக்கும் ஆணையும் என்ற தொனிப் பொருளில் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)



# வடக்கு உட்பட சில பகுதிகளில் காற்று மாசுபாடு அதிகரிக்கும்

கொழும்பு, டிசெ. 31

வடக்கு உட்பட நாட்டின் சில பகுதிகளில் இன்றைய தினம் காற்று ஆரோக்கியமற்ற நிலையில் இருக்கும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் நிலவும் வளி மாசுபாடே இதற்குக் காரணம் என்றும் அந்த நிறுவகம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய மாகாணங்களில் காற்றின் தரச்சுட்டி நேற்றைய தினம் 100 முதல் 150 புள்ளியாகப் பதிவாகியுள்ளது.

இதன்காரணமாக, சுவாச நோயாளர்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பவதி தாய்மார்கள் அவதானமாக செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# பேரிடரால் பாதிக்கப்பட்டோருக்காக தனது சேமிப்பை வழங்கிய மாணவி!

யாழ்ப்பாணம், டிசெ. 31

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் கையேடுகளை வழங்குவதற்காக மாணவி ஒருவர் தனது உண்டியல் சேமிப்பு பணத்தை வழங்கியுள்ளார்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு, மலையகத்தை சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் கையேடுகளை தயாரிப்பதற்கான நிதி சேகரிப்பில் வெண்கரம் அமைப்பு ஈடுபட்டு வருகிறது.

இந்த நிதி சேகரிப்புக்கு ஆதரவு அளிக்கும் விதமாக சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் தரம் 7இல் பயிலும் மாணவியான பு. சர்ஜனா என்ற சிறுமி தனது அன்றாட செலவுகளை தியாகம் செய்து சிறுகச் சிறுக சேகரித்த உண்டியல் பணத்தை அளித்துள்ளார்.

வெண்கரம் அமைப்பினர் அந்தச் சிறுமியின் சமூகநலனை பாராட்டி நேற்றுமுன்தினம் கௌரவித்தது. (ஐ-05)



# ஓய்வுபெற்ற அதிபரின் ஊழல் குறித்து விசாரணை

முல்லைத்தீவு, டிசெ. 31

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் பாடசாலை ஒன்றில் அதிபராக பணியாற்றி ஓய்வு பெற்றவருக்கு எதிராக ஊழல் விசாரணைகளை முன்னெடுக்க பிரதமரின் செயலகம் பணிப்புரை விடுத்துள்ளது.

அத்துடன், குறித்த அதிபரின் ஓய்வூதியத்தையும் நிறுத்தி வைக்குமாறு கல்வி அமைச்சுக்கு உத்தரவிட்ட பிரதமர் செயலகத்தின் மூத்த உதவிச் செயலாளர் ரி. சிறீமன்ன அதற்கான கடிதத்தை கடந்த 12ஆம் திகதி கடிதம் மூலம் கல்வி அமைச்சுக்கு பாரப்படுத்தி உள்ளார்.

குறித்த அதிபர் அரசின் சட்ட வரையறைகளை மீறி சமூக ஊடகங்கள் மூலம் நிதி திரட்டியுள்ளார். அத்துடன், பாடசாலையுடன் தொடர்பில்லாத - பாடசாலையின் பெயரில் இயங்கும் நிதியம் ஒன்றுக்கு நிதி அனுசரணை வழங்கக் கோரி கடிதங்களையும் அனுப்பியுள்ளார் என்று பிரதமரின் செயலகம் சுட்டிக் காட்டியுள்ளது. (ஐ)

அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக

# வவுனியா பல்கலையிலும் நேற்று பணிப்புறக்கணிப்பு

வவுனியா, டிசெ. 31

பல்கலைக்கழகங்களின் துறைத்தலைவர்கள், பீடாதிபதிகளின் நியமனம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்கம் நேற்று பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் திருமதி பி. தர்மதா,

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலையீட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் அடையாள பணி பகிஷ்கரிப்பை இன்று (நேற்று) நடத்துகிறது.

பல்கலைக்கழகங்களின் துறைத்தலைவர்கள், பீடாதிபதிகளின் நியமனம் தொடர்பான பல்கலைக்கழக சட்டத் திருத்தம் பற்றிய பிரேரணை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டது. இதன் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் டிசெம்பர் 3ஆம் திகதி அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தில், துறைத்தலைவர்கள் மற்றும் பீடாதிபதிகளின் நியமனம் தொடர்பான எந்த ஒரு நடவடிக்கையும் மறு அறிவித்தல் வரை உடனடியாக ஒத்திவைக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. பல்கலைக்கழக மானியங்களின் இத்தகைய முறையற்ற தலையீடானது அரசு பல்கலைக்கழகங்களின் சுயாதீன செயல்பாட்டை பாதிக்கும்.

பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான எந்த ஒரு சாதகமான முடிவும் எட்டப்படாத நிலையில் பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் அந்தக் கடிதங்களை மீளப்பெற வலியுறுத்தியே இந்த ஒரு நாள் அடையாள பணி பகிஷ்கரிப்பு ஒன்றினை நடத்துகிறோம் - என்றார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
31.12.2023 புதன்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## புதிய பயங்கரவாத தடை சட்டம்

ஒருகாலத்தில் தீவிரவாதிகள் என்று வேட்டையாடப்பட்டவர்கள் நாட்டுக்கான பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தீர்மானிக்கவுள்ளனர். அரசியலில் எவ்வாறான ஆச்சரியங்களும் நடக்கலாம் என்பதற்கு இது ஓர் உதாரணம். யுத்தம் முடிவுற்று பதினாறு ஆண்டுகள் கடந்திருக்கும் சூழலில் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அடுத்த ஆண்டு கொண்டுவரவுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

முன்னையஆட்சியாளர்கள் பலமுறை வாக்குறுதிகள் வழங்கிய போதிலும்கூட, அதனை நடைமுறைப்படுத்தவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் பாராளுமன்றப் பொரும்பான்மையைக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக எவ்வாறானதொரு சட்டத்தைக் கொண்டுவரவுள்ளது?

அரசாங்கம் யோசித்துவரும் உத்தேச சட்ட மூலம் முன்னைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் கடுமையானது என்னும் குற்றச்சாட்டை எதிரணியினரும் அதேபோன்று சில சிவில் சமூகக் குழுவினரும் கூறுகின்றனர். அரசாங்கத்தின் அனைத்து விடயங்களையும் எப்போதுமே எதிர்த்துவரும் எதிர்க்கட்சிகள் வழமையாகக் கூறும் விடயங்கள் ஆச்சரியமானதல்ல. ஆனால், சிவில் சமூகக் குழுக்கள் வாதிட முற்படுவதுபோன்று உத்தேச சட்ட மூலம் சிக்கலானதா?

பயங்கரவாதத் தடைச் சட்டம் அனைத்து நாடுகளிலும் நடைமுறையில் இருக்கும் ஒன்றுதான். ஆனால், இலங்கையில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் அடிப்படையில் சிறுபான்மை முக்கியமாக, ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் தீயநோக்கம் கொண்டது. எனவே, அது நீக்கப்படவேண்டும் என்னும் கோரிக்கை நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு தொடர்ந்தும் அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தது. மகிந்த ராஜபக்ஷ காலத்தில் ஆடை ஏற்றுமதிக்கு வழங்கிவரும் வரிச் சலுகையையும் நீக்கியது. ஆனாலும் அதன் பின்னரும் குறித்த சட்டம் நீக்கப்படவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய சட்டமூலம் ஒன்றை அடுத்த ஆண்டு ஆராயவுள்ளது.

இலங்கையின் பயங்கரவாதப் புரிதல் தற்போது மாற்றம் பெற்றுள்ளது. ஆரம்பத்தில் ஜே. வி. பி.யின் கிளர்ச்சி. பின்னர், தமிழ் ஆயுத விடுதலை இயக்கங்களின் எழுச்சி ஆகியவற்றின் பின்னணியில் உள்நாட்டு வன்முறையைக் கட்டுப்படுத்துதல் என்னும் அடிப்படையில் பயங்கரவாதம் வரையறுக்கப்பட்டது. தற்போது, அதற்கான தேவை இல்லாதநிலையில் பயங்கரவாதத்தை வரையறுத்தல் என்பது சர்வதேச ரீதியான பார்வைக்குள் வந்திருக்கிறது.

ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாதப் பார்வைக்குள் இலங்கை வந்துவிட்டது. இந்தப் பின்புலத்தில் இலங்கைக்கு சர்வதேச தரம் வாய்ந்த பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒன்று தேவை என்னும் வாதத்தை நிராகரிக்க முடியாதநிலைமையே காணப்படுகிறது. ஆனால், அவ்வாறான சட்ட மூலம் மீளவும் உள்நாட்டுக்குள் அரசியல் தேவைகளுக்காக துஷ்பிரயோகம் செய்யக்கூடிய ஒன்றாக இருக்கக்கூடாது.

ஆனால், சர்வதேச தரத்திலான புதியதொரு பயங்கரவாதத் தடைச் சட்டம் தேவையில்லை என்னும் வாதம் ஏற்புடையதல்ல. ஏனெனில், அவ்வாறான வாதங்களை முன்வைக்கக்கூடிய நிலையில் நாடு இல்லை. சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ. எஸ். ஐ. எஸ்.இன் தாக்குதல் ஒரு நாட்டுக்குள் இடம்பெற்றிருக்கிறது என்றால் அந்த நாட்டில் மீண்டும் அவ்வாறானதொரு தாக்குதல் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில் சட்ட ஏற்பாடுகள் அவசியம்தான்.

## வனப்பகுதிகளில் நுழைவதற்கான கட்டுப்பாடுகளை தளர்த்தவேண்டும்

கொழும்பு, டிசெ.31

வனப்பகுதிகளில் நுழைவதற்கான கட்டுப்பாடுகளை தளர்த்த அரசாங்கம் சட்ட திருத்தங்களை மேற்கொள் ளாவிட்டால், வேடர்கள் சமூகத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை என ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிவிக்க வேண்டிய நிலை ஏற்படும் என பழங்குடியினர் சமூக தலைவர் உறுவரிகே வன்னில அத்தோ தெரிவித்துள்ளார்.

இலங்கை பழங்குடியினர் உரிமைகள் தொடர்பான ஐ.நா. உடன்படிக்கைகளில் கையெழுத்திட்ட நாடாக இருந்தும், தேசிய அளவில் அந்த உரிமைகள் நடை முறையில் பாதுகாக்கப்பட வில்லை என அவர் குற்றம் சாட்டினார்.

உலக பழங்குடியினர் தினத்தன்று காட்டுவாசிகள் கிராமத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, தேவையான சட்ட திருத்தங்கள் கொண்டுவரப்படும் என உறுதி அளித்திருந் தாலும், இதுவரை எந்த முன்னேற்றமும் காணப்பட வில்லை என்றும் வன்னில அத்தோ கூறினார்.

வேடர்கள் சமூகத்தின் வாழ்வாதாரம், பண்பாடு, கல்வி மற்றும் மத வழிபாடுகள் அனைத்தும் வனத்துடன் தொடர்புடையவை என்றும், தற்போதைய கட்டுப்பாடுகள் தங்களின் அடையாளத்தையே அச்சுறுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் தொடர்ந்து தங்களின் உரிமைகளை புறக்கணித்தால், ஐக்கிய நாடுகள் சபையை அணுகுவதை தவிர வேறு வழியில்லை என்றும், அதே நேரம் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை இன்னும் இருப்பதாகவும் அவர் கூறினார். (அ)

## நாட்டில் 50 மாணவரைக்கூட எட்டாத 1,646 பாடசாலைகள்!

### கல்வி அமைச்சு அறிக்கை

கொழும்பு, டிசெ. 31

நாட்டில் 50 இற்கும் குறைவான மாணவர்களுடன் இயங்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 1,646 பாடசாலைகள் 50 இற்கும் குறைவான மாணவர்களுடன் இயங்குவதாக, கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு 50 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 1,555 ஆக இருந்தது.

இந்த நிலையில், கடந்த ஜூன் மாத அறிக்கைகளுக்கு அமைய, அந்த எண்ணிக்கை 1,646 ஆக அதிகரித்துள்ளது.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

## ஊடகங்களை அச்சுறுத்துவதை அரசாங்கம் நிறுத்தவேண்டும்!

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 31

ஊடகங்களை அச்சுறுத்துவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார்.

பொது சுகாதாரம் குறித்து எதிர்மறையான செய்திகளை வெளியிடும் ஊடக நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்கள் ரத்து செய்யப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ விடுத்துள்ள எச்சரிக்கைக்கு ஐக்கிய மக்கள் சக்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.


கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


சுகாதாரத்துறையில் நிலவும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது ஊடகங்களின் பொறுப்பாகும். தரம் குறைந்த மருந்துகளினால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால், அதனை வெளிப்படுத்துவது ஊடகங்களின் கடமையாகும். ஆனால், இவ்வாறான செய்திகளை வெளியிட்டால் ஊடகங்களின் உரிமத்தை ரத்து செய்வேன் என அமைச்சர் கூறுவது ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தலாகும் உண்மைகளை மறைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக உதவியமைக்காக மக்கள் விடுதலை முன்னணிக்கு ஒரு வானொலி அலைவரிசை வழங்கப்பட்டது. பொதுச் சொத்தான அந்த அலைவரிசையை ஜே.வி.பி பின்னர் ஒரு பாரிய தொகைக்கு விற்றுவிட்டது. அவ்வாறு செய்தவர்களுக்கு இன்று பொதுமக்களின் அலைவரிசைகள் குறித்துப் பேச என்ன தகுதி இருக்கிறது? - என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**இடபம்**
குடும்பத்தினரை அனுசரித்து போங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாமே. கவனமுடன் இருக்க வேண்டும்.

**மிதுனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களை மதிப்பார். மதிப்புக் கூடும் நாள்.

**கடகம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வெற்றி கிடைக்கும்

**சிம்மம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். புதிய சிந்தனைகள் பிறக்கும். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர். சிலர் இழுத்தடிப்பார்கள் புது முதலீடுகளை தவிர்க்கவும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**துலாம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எண்ணிக்கையை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.


**தனுசு**
புதிய முயற்சிகள் வெற்றியடையும். உறவினர்களின் அன்புத்தொல்லை குறையும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். திருப்தி உண்டாகும். நினைத்தது நிறைவேறும்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பழைய கடனை பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பார்த்த திடீர் உதவி கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். உத்தியோகத்தில் புது வாய்ப்பு தேடி வரும்.

# நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் நான்கு கிலோ கஞ்சாவுடன் கைது



யாழ்ப்பாணம், டிசெ. 31

இலங்கை தமிழ் அரசுக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் நான்கு கிலோ 800 கிராம் கஞ்சாவுடன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியாலை பகுதியைச் சேர்ந்த குறித்த உறுப்பினர் சங்கிலியன் பூங்கா அருகில் வைத்து யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் வெளிநாட்டில் இருந்து வரும் ஒப்பந்தத்துக்கமைய போதைப்பொருளை கையளிப்பதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-03-05)

# டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் கையேடு வழங்கிய வெண்கரம் அமைப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 31

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் கையேடு வழங்கும் பணி வெண்கரம் அமைப்பால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

வெண்கரம் அமைப்பின் சித்தங்கேணி அலுவலகத்தில் வெண்கரத்தின் பிரதான செயல்பாட்டாளர் மு. கோமகனால் இந்தப் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வெண்கரம் அமைப்பின் செயல்பாட்டாளர்கள் தன்னார்வ ரீதியாக மக்களிடம் சேர்த்த நிதியை பயன்படுத்தி இவ்வாறு கற்றல் கையேடுகளை தயாரித்து வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு வழங்குவதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் சம்பிரதாயபூர்வ நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வின் ஆரம்பத்தில், கலந்துகொண்ட அனைவரும் வெண்சுடர்கள் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து உரைகள், கையேடுகள் வழங்கல் என்பன நடைபெற் றன.

வெண்கரம் அமைப்பின் பிரதான செயல்பாட்டாளர் மு. கோமகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சங்கானை கல்வி கோட்டத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளர் நொபேட் உதயகுமார், வலிகாமம் கல்வி வலய ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் சுகுணா, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-05)

# வடமராட்சி கடலில் காணாமல் போன இளைஞனின் சடலம் கரையொதுங்கியது

யாழ்ப்பாணம், டிசெ. 31

இரண்டு நாட்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு பகுதியில் கடலில் காணாமல் போன இளைஞனின் சடலம் நேற்றுக்காலை கரையொதுங்கியது.

குறித்த இளைஞன், நண்பர்களுடன் தாளையடி கடற்கரைக்கு நீராடச் சென்ற வேளை கடல் அலையில் இழுத்து செல்லப்பட்டு காணாமல் போயிருந்தார்.

இவரை தேடும் பணி இரண்டு நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் குறித்த இளைஞனின் சடலம் அதே பகுதியில் நேற்று கரையொதுங்கியது

சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 27 வயதுடைய உதைபந்தாட்ட வீரர் ஆவார்.

சடலத்தை மருதங்கேணி பொலிஸார் பார்வையிட்டதுடன் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# வேலன் சுவாமியை சந்தித்து நலம் விசாரித்த மதகுருமார்

யாழ்ப்பாணம், டிசெ. 31

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொண்ட வேலன் சுவாமி, வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இதன் பின்னர் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் அவரை கத்தோலிக்க மதகுருமார் நேரில் சென்று நலம் விசாரித்துள்ளனர்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் மக்களோடு மக்களாக வேலன் சுவாமியும் கலந்து கொண்டார். இந்த நிலையில், பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளான நிலையிலேயே அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட வேலன் சுவாமியை அருட்தந்தை வசந்தன், அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா, அருட்தந்தை ஜெயக்குமார் ஆகியோர் நல்லூரில் உள்ள சிவகுரு ஆதீனத்தில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

மதகுருமார்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமைக்கு கத்தோலிக்க மதகுருமார் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். (எ)

# நைனாமடு மக்களுக்கு உதவிகள்

வவுனியா, டிசெ. 31

வவுனியா வடக்கு பிரதேசத்துக்குட்பட்ட நைனாமடு கிராமத்தில் டித்வா புயல் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய உணவுப் பொதிகளும் 17 பாலூட்டும் தாய்மார்களுக்கான போஷாக்கு உணவுப்பொருட்களும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நைனாமடு இணையும் கரங்கள் அமைப்பின் மாற்று வலுவுடையோர் சங்க நிலையத்தில் திருமதி சந்திரமதி தலைமையில் நடைபெற்றது. (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களைத் தடுக்க புதிய சட்டமூலம் ஜனவரியில்!

## பாராளுமன்றில் முன்வைக்க திட்டம்

கொழும்பு, டிசெ.31

**ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டமூலம் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.**

இந்த சட்டமூலத்தின் மூலம், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் மற்றும் நீண்டகால சிறைத்தண்டனைகள் விதிக்கப்படவுள்ளன.

அத்துடன், குற்றச்சாட்டுக்குள்ளானவர்களை நீண்டகாலம் விசாரணைக்காக தடுத்து வைக்கக்கூடிய தனித்துவமான சட்ட ஏற்பாடுகளும் இதில் உள்ளடக்கப்படவுள்ளன.

சமீப காலமாக நாட்டின் பல பகுதிகளில் போதைப் பொருள் தொடர்பான கும்பல் வன்முறைகள், குறிவைத்து நடத்தப்படும் துப்பாக்கிச்சூடுகள் மற்றும் ஒப்பந்த கொலைகள் அதிகரித்துள்ள நிலையில், இவ்வாறான குற்றங்களை கட்டுப்படுத்த தற்போதுள்ள சட்டங்களில் போதிய வலிமை இல்லை என அரசு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து செயல்படும் குற்றவாளிகள், குற்றச்செயல்களால் ஈட்டப்பட்ட சொத்துகளை பறிமுதல் செய்வதில் உள்ள சிக்கல்கள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையிலேயே இந்த புதிய சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சகல பாடசாலைகளும் ஜனவரி 5 இல் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.31

அனைத்து பாடசாலைகளிலும் எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி 2026 ஆம் ஆண்டிற்கான முதலாம் தவனை கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் கட்டடங்கள் அபாயகரமாக உள்ள பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள், அருகிலுள்ள பாதுகாப்பான பாடசாலைகளுக்கு மாற்றப்படுவார்கள்.

தற்போது சில பாடசாலைகள் தற்காலிக தங்குமிடமாக பயன்படுத்தப்படுவதால், அவற்றின் மாணவர்களும் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு மாற்றப்படுவர் என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவேவா தெரிவித்துள்ளார்.

பேரிடர் காரணமாக மாணவர்கள் மற்றும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை குறைக்க பாடசாலைகளின் விடுமுறைகள் நீடிக்கப்பட்டன.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டவுடன், சில மாணவர்களை மட்டும் அனுமதித்து மற்றவர்களை வீட்டில் வைக்க முடியாது. அனைவரும் கல்வியை தொடரும் வழிகளை ஏற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கோட்ட மற்றும் வலயக் கல்வி அதிகாரிகள், ஜனவரி 5 முதல் அனைத்து மாணவர்களும் பாடசாலைக்கு செல்ல ஏற்பாடுகளை செய்ய அனுமதி பெற்றுள்ளனர். அவசர தேவைகள், பாதுகாப்பு மற்றும் மாற்று ஏற்பாடுகள் ஆகியவை இதற்குள் கவனிக்கப்படும்.

சில பாடசாலைகள் கட்டட சேதம் அல்லது எதிர்கால இயற்கை அபாயங்களுக்கு உட்பட்டதால் அபாயகரமாகவும், சில தற்காலிக முகாம்களாக மாற்றப்பட்டுள்ளதால் மாணவர்களை பாதுகாப்பான பாடசாலைகளுக்கு மாற்றுவது முக்கியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# தொலைக்காட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஒளிபரப்பு அனுமதி நிபந்தனைகளுக்குட்பட்டது!

கொழும்பு, டிசெ. 31

தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு ஊடக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஒளிபரப்பு அனுமதிப்பத்திரங்கள் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவையே ஆகும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதார தகவல் பரப்பலுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் அதிக அளவிலான இறப்புகளுக்கு தொற்று அல்லாத நோய்கள காரணமாகின்றன. ஆரம்ப கட்டத்திலேயே தொற்று அல்லாத நோய்களைத் தடுக்க முடிந்தால், இறப்புகளின் எண்ணிக்கையை விரைவாக குறைக்க முடியும்.

சுகாதாரத்திற்காக ஒதுக்கப்படும் பணத்தில் பெரும்பாலானவை நவீன உயர்தொழில்நுட்ப உபகரணங்களை வாங்குவதற்கும், அதைப் பராமரிப்பதற்கும், ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்கும் செலவிடப்பட வேண்டும்.

நோய்த்தடுப்பு, ஆரம்ப கட்டத்திலேயே நோயாளிகளை அடையாளம் கண்டு சிகிச்சை அளிப்பதன் மூலம், பல நோயாளிகளின் உயிர்களைக் காப்பாற்ற முடியும். செலவுகளைக் குறைக்க முடியும்.


மேலும் தகவல் தொடர்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

பொதுமக்களுக்கு கல்வி கற்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொதுமக்களுக்கு சுகாதார செய்திகளை கொண்டு செல்வதில், ஊடக நிறுவனங்களின் பங்கு அளப்பெரியது.

பொதுமக்களை பயமுறுத்தும் மற்றும் பொது சுகாதாரத்தை சிதைக்கும் தகவல்கள் பரப்பப்பட்டால், சம்பந்தப்பட்ட அலைவரிசைகளின் அனுமதிப் பத்திரத்தைத் திரும்பப் பெறுவதற்கு அமைச்சருக்கு முழு அதிகாரம் உள்ளது-என்றார். (அ)

# நுரைச்சோலை மின் நிலையத்தின் 2 மின்பிறப்பாக்கிகள் செயலிழப்பு!



கொழும்பு, டிசெ.31

நுரைச்சோலை லக்விஜய அனல் மின்நிலையத்தின் இரண்டு மின் பிறப்பாக்கிகள் திருத்தப்பணிகள் காரணமாக தற்போது செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தேசிய மின் கட்டமைப்பிற்கு 600 மெகாவாட் மின் கொள்ளளவு தற்போது இழக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லக்விஜய மின்நிலையத்தின் ஒரு மின் உற்பத்தி இயந்திரம் மாத்திரமே தற்போது இயங்கி வருவதுடன், அதன் மூலம் 300 மெகாவாட் மின்சாரம் தேசிய கட்டமைப்பிற்கு இணைக்கப்படுகிறது. வழமையான பராமரிப்புப் பணி காரணமாக கடந்த நவம்பர் மாதம் 3ஆம் திகதி ஒரு இயந்திரம் நிறுத்தப்பட்டிருந்தது. கடந்த 20ஆம் திகதி ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மற்றுமொரு இயந்திரத்தையும் செயலிழக்கச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாக மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது அந்த இரண்டு இயந்திரங்களினதும் திருத்தப்பணிகள் இடம்பெற்று வருவதுடன், எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் வாரத்திற்குள் அவற்றை மீண்டும் மின் உற்பத்திக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நீர் மின் உற்பத்தி வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதால் அன்றாட மின் விநியோகத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கண்டி மாவட்ட செயலகத்துக்கு

# வெடிகுண்டு மிரட்டல் குறித்து சி.ஐ.டியினர் தீவிர விசாரணை

கண்டி, டிசெ. 31

கண்டி மாவட்ட செயலகத்துக்கு மின்னஞ்சல் ஊடாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கண்டி மாவட்ட செயலகத்தின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு டிசெம்பர் 23 ஆம் திகதி வெடிகுண்டு மிரட்டல் விடுத்து குறுஞ்செய்தி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கண்டி மாவட்ட செயலகத்தில் விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விசேட சோதனை நடவடிக்கையின் போது கண்டி மாவட்ட செயலகத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் எந்த பொருளும் கிடைக்கவில்லை.

பின்னர் இது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# அம்பாறையில் ஆற்றில் கார் கவிழ்ந்து விபத்து!

### மூவர் மருத்துவமனையில் அனுமதி



கல்முனை, டிசெ. 31

அம்பாறை, பக்கிஎல்ல, ரஜகலதென்ன பிரதேசத்தில் பாலத்திலிருந்து ஆற்றில் கவிழ்ந்து கார் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காரில் பயணித்த சாரதி உட்பட மூவர் காயமடைந்த நிலையில் கொனகொல்ல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சாரதி மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# கிழக்கு ஆளுநர் தலைமையில் மதிப்பீட்டு திறன் விருது விழா



திருகோணமலை, டிசெ. 31

கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண மதிப்பீட்டு திறன் விருது வழங்கும் விழா திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில், கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாணத்துக்குள் உள்ள கிராமிய அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகள், கிராமிய அபிவிருத்தி அதிகாரிகள் உள்ளிட்ட பலர் திறன் விருதுகளை பெற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாவட்ட செயலாளர் ஜி. எம். ஹேமந்த குமார, மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், மாகாண அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(எ-12)

# நாவலப்பிட்டியில் குண்டுப்புரளி

கண்டி, டிசெ. 31

நாவலப்பிட்டியில் உள்ள பஸ்பாகே கோரல பிரதேச செயலகத்தின் சேமிப்பு அறை உட்பட பிரதேச செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சோதனை நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். ஆனால், சந்தேகத்துக்குரிய எதுவும் கிடைக்கவில்லை.

நாவலப்பிட்டியில் உள்ள பஸ்பாகே கோரல பிரதேச செயலாளர் திருமதி ரம்யா ஜெயசுந்தரவுக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் செய்தியின்படி, வெளிநாட்டிலிருந்து வந்த பொதியில் ஒரு வெடிகுண்டு இருப்பதாகவும் திங்கட்கிழமை பிற்பகல் 02:00 மணிக்கு வெடிக்கும் என்றும் கூறப்பட்டிருந்தது.

உடனடி நடவடிக்கை எடுத்த பிரதேச செயலாளர், பிரதேச செயலக ஊழியர்களையும் பிரதேச செயலகத்துக்கு வந்த மக்களையும் வெளியேற்றி, பாதுகாப்பு படையினருக்கு தகவல் தெரிவித்தார்.

நாவலப்பிட்டி பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், இராணுவ வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு மற்றும் பொலிஸ் மோப்ப நாய் பிரிவு ஆகியவற்றின் உதவியுடன் சேமிப்பு அறையை ஆய்வு செய்த பின்னர், அங்கு சந்தேகத்துக்குரிய எதுவும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

(எ)

# பதுளை மாவட்டத்தில் பாடசாலைகளை மீளக்கட்டியெழுப்ப கடற்படை பங்களிப்பு

பதுளை, டிசெ. 31

டித்வா புயலால் சேதமடைந்த பதுளை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகளை மீளக்கட்டியெழுப்புவதற்காக பங்களிக்கும் கடற்படையினர், தற்போது பதுளை மற்றும் பசறை கல்வி வலயங்களில் சேதமடைந்த பாடசாலைகளில் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி, பதுளை கல்வி வலயங்களில் பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகளை மீண்டும் கட்டியெழுப்ப தொழில்நுட்ப மற்றும் கலைத்துவ ஆதரவை வழங்குவதன் கீழ், பதுளை பிபிலேகம மகா வித்தியாலயம், அல் அபீன் வித்தியாலயம், சிறீ கணேஷா தமிழ் வித்தியாலயம், விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயம் மற்றும் மிஹிந்து பாலர் பாடசாலை ஆகியவை கடற்படையின் கலைத்துவ பங்களிடன் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், "கிளீன் சிறீ லங்கா" தேசிய திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஜனாதிபதி பணிக்குழுவின் முக்கிய பங்காளியாக இருக்கும் கடற்படை, "மகிழ்ச்சி நிறைந்த பாடசாலை" என்ற கருப்பொருளை நனவாக்கும் வகையில் பாடசாலை வளாகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் தொடர்ந்து பங்களித்து வருகிறது.

(எ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக்கூடும்

### அம்பாறையில் பலத்த காற்று

கொழும்பு, டிசெ. 31

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா மற்றும் பொலநறுவை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இந்தப் பிரதேசங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும்.

கண்டி மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் அடிக்கடி மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் களுத்துறை மாவட்டத்திலும் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும்.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் அம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு சுமார் 40 கிலோ மீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் மூடுபனி நிலை காணப்படலாம்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடும் என்பதால் அவற்றினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

(எ)

# சம்மாந்துறையில் நாளை முதல் வீதியோர வியாபாரத்துக்கு தடை

### மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

சம்மாந்துறை, டிசெ. 31

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை நகரின் பிரதான வீதியோரங்களில் வியாபாரம் செய்வது நாளை வியாழக்கிழமை முதல் தடை செய்யப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச சபையில் வீதியோர மீன் வியாபாரிகள் மற்றும் வியாபாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

சம்மாந்துறை நகரிலுள்ள அம்பாறை வீதி, பொலிஸ் வீதி, கல்முனை வீதி ஆகியவற்றின் இரு புறங்க ளில் உள்ள வீதியோர மீன் வியாபாரிகள் உட்பட மரக்கறி வியாபாரிகள், பழ வியாபாரிகள் சகல வீதியோர வியாபாரிகளும் தமது வியாபார நடவடிக்கைகளை முதலாம் திகதி முதல் ஹிஜ்ரா பொது சந்தையின் உட்பகுதியில் மேற்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நடைபாதை வியாபாரத்துக்கு வரும் வியாபாரிகள் வீதியோரங்களில் கழிவுப் பொருட்களை வீசிவிட்டு செல்வதால் சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுத்துவதாகவும் தவிசாளர் குறிப்பிட்டார்.

வீதியோரங்களில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாமல் பல அசௌகரிங்களை எதிர்கொள்வதோடு, வீதி விபத்துக்களும் அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடிகானுக்கு இடப்பட்டுள்ள பாதுகாப்பு மூடிக்கு மேல் உணவுப் பொருட்கள் வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இப் பொருட்களில் ஈ பரவுவதோடு, அசுத்தமடைந்து காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சபை தீர்மானங்களை மீறி வீதியோரங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன்ஸ்டனின் மகன் கைது!

கொழும்பு, டிசெ. 31

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் ஜொஹான் பெர்னாண்டோ பொலிஸ் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

லங்கா சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான லொறி உள்ளிட்ட பல வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட ஜொஹான் பெர்னாண்டோவை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## தையிட்டி...

மேலும்," தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி பொதுமக்களுடையவை என்பதை ஜனாதிபதி, நீதி அமைச்சர் உள்ளிட்ட அரச தரப்பினருக்கு நான் தெளிவு படுத்தியுள்ளேன். இந்தப் பிரச்னையை அரசியலாக்கி முரண்பாடுகளை வளர்க்க வேண்டாம் என்று தமிழ் - சிங்கள மக்களிடம் கோருகிறேன். அந்தக் காணிகளை காணிகளின் உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும் - அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை" - என்றும் குறிப்பிட்டார். (ஐ)

## திஸ்ஸ...

அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்ட அழைப்பை விடுத்தனர்.

அங்கு அவர்கள் தெரிவிக்கையில்,

"தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையானது 18 பேருக்கு சொந்தமான காணி. இந்தப் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்தபோது யாருக்கும் தெரியாமல் கட்டப்பட்ட இந்த விகாரைக்கு எதிராக சுமார் 3 வருட காலமாக ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்திலும் போராட்டத்தை மேற்கொண்டு வருகிறோம்.

"மக்களுடைய காணிகள் மக்களுக்கே வழங்கப்படும் எனக் கூறும் இந்த அநுர அரசாங்கம் இந்தக் காணிகளை விடுவிப்பதில் இரட்டை வேடம் போடுகிறது. நாங்கள் இந்த ஆட்சியில் மட்டுமல்ல கடந்த அரசாங்கங்களின் காலத்திலும் இந்தக் காணி தனியாருடைய காணி என்பதற்கான சகல ஆதாரங்களையும் சமர்ப்பித்து விடுவிக்குமாறு கோரிய நிலையில் தற்போதைய அமைச்சர் சந்திரசேகர் உறுதிகளை ஆராய வேண்டும் எனக் கூறுகிறார்.

நீங்கள் எங்களின் உறுதிகளை ஆராயாமல் காணி தரவேண்டாம். எங்கள் உறுதிகள் அனைத்தும் 1912ஆம் ஆண்டு முதல் முறையாக இருந்தமைக்கான பதிவுகள் அனைத்தும் எம்மிடமும் திணைக்களங்களிடமும் இருக்கின்றன - ஆராயுங்கள். எதிர்வரும் 3ஆம் திகதி திஸ்ஸ விகாரைக்கு மீண்டும் ஒரு புத்தர் சிலையை கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு எதிராக அன்றைய தினம் போராட்டம் நடைபெறவுள்ளது.

காணிகளை மீட்பதற்கான எமது போராட்டம் சைக்கிள் கட்சியின் போராட்டமல்ல. எமது நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு விகாரை கட்டப்பட்டமைக்கு எதிராக அனைத்து கட்சியினரிடமும் கோரிக்கைகளை முன்வைத்தோம். ஆனால், எம்மோடு இணைந்து போராட்டங்களை முன்னெடுக்க அவர்களே முன் வந்தார்கள். நாங்கள் யாரையும் குறை கூறுவதற்காக கூறவில்லை. எமது போராட்டம் எமக்கானதாக மட்டும் நினைத்து விட வேண்டாம்.

இன்று தையிட்டி மக்களின் காணிகளில் எப்படி விகாரை அமைக்கப்பட்டதோ அவ்வாறே நாளை உங்களுடைய காணிகளிலும் விகாரை அமைக்கப்படும். கேட்டால் இது பௌத்த சிங்கள நாடு என்று கூறுவார்கள். தற்போது வவுனியாவில் புதிதாக புத்தர் சிலை முளைக்கிறது இதேபோல் உங்கள் வீடுகளின் பின்புறமும் புத்த விகாரைகளை அமைப்பார்கள் நாங்கள் கேள்வி கேட்க முடியாதவர்களாக தொடர்ந்து ஆளாக்கப்படுவோம்.

நயினாதீவு விகாராதிபதி எமது நியாயமான போராட்டத்தை ஆதரித்துள்ள நிலையில் எங்களில் சிலர் கேட்கிறார்கள் விகாரை கட்டும் வரை எங்கிருந்தீர்களென. அவர்களிடம் நாம் தெரிவிப்பது ஒன்றே விகாரை கட்டும்போது எமக்குத் தெரியாது. கட்டப்பட்ட விகாரைக்கு எதிராகப் போராடி வரும் நிலையில் மூன்று புதிய கட்டடங்களை விகாரைக்குள் கட்டி விட்டார்கள் தடுக்க முடிந்ததா? - என்று கேள்வி எழுப்பினர். (ஐ)

## தையிட்டி சட்டவிரோதம்...

அரசாங்கம் அமைத்துள்ள விசாரணை குழு தீர்ப்பளித்தால் அதனை ஏற்கத் தயார்" - இவ்வாறு தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின்தோட்டை நந்தாராம தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், "காணிப் பிரச்னை தீர்க்கப்படும்வரையில் வளாகத்தில் எவ்விதமான புதிய கட்டுமானங்களையும் மேற்கொள்ள மாட்டோம்" என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

தையிட்டி விகாரையிலுள்ள அவரின் வசிப்பிடத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "விகாரையில் எதிர்வரும் 03ஆம் திகதி பௌர்ணமி தினத்தில் வழமையான பூசை வழிபாடுகள் தான் நடைபெறும். விசேட பூசை வழிபாடுகள் எதற்கும் விகாராதிபதியாக நான் எதற்கும் இடமளிக்கவில்லை.

"தெற்கில் இருந்து புத்தர் சிலை எடுத்து வரப்படுவதாகவும் அன்றைய தினம் விசேட பெரஹரா நடைபெறவுள்ளது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், அவ்வாறான எதற்கும் நான் அனுமதி வழங்கவில்லை. அரசியல் நோக்கத்துக்காகக் குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம்.

"விகாரை அமைந்துள்ள தனியார் காணிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவென அரசாங்கத்தால், புதிய குழு அமைத்துள்ளார்கள். அந்தக் குழுவிடம் எமது விகாரைக்கான ஆவணங்களை கையளித்துள்ளோம். இதேபோன்று காணிகளைக் உரிமை கோரும் நபர்களும் தமது காணிகள்தான் என்பதற்கான ஆவணங்களை கையளித்துள்ளனர். இந்த விவாகரத்தில் இது ஒரு சட்டவிரோத செயல் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டால் அதனையும் ஏற்க நான் தயார். விகாரை காணி விடுவிப்பு தொடர்பில் இதுவரை யாரும் என்னுடன் பேசவில்லை.

"அரசாங்கக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கு மதிப்பளித்து விகாரை வளாகத்தில் எவ்விதமான புதிய கட்டுமானங்களையும் மேற்கொள்ள மாட்டோம்" - என்றார். (ஐ)

## புதுப்பிக்கப்பட்ட...

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

நேற்றைய தினம் சுங்கத் திணைக்களத்தை நேரில் பார்வையிட்டு 2025 ஆம் ஆண்டு சாதனைகள் மற்றும் 2026 க்கான புதிய திட்டங்களை ஜனாதிபதி ஆராய்ந்தார். இதன்போது, நாட்டின் வருமானத்தை ஈட்டித் தரும் முக்கிய பங்களிப்புக்கு அவர் அனைத்து அதிகாரிகளுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமான வருமானக் குறைவை மீண்டும் சரி செய்து, நாட்டில் பொருளாதார மற்றும் சமூக நிலையேற்றத்தை உருவாக்க அரசு நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டிற்கான திட்டங்களில் வருமான சேகரிப்பு, வர்த்தகத்தை எளிதாக்கல், சமூக பாதுகாப்பு மற்றும் நிறுவன அபிவிருத்தி போன்ற 4 முக்கிய பிரிவுகளில் முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும் சுங்க நடவடிக்கைகளில் உள்ள குற்றச் செயல், தாமதம், ஊழல் பிரச்சினைகளை தீர்க்கும் நடவடிக்கைகள், பொருட்கள் சோதனை மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்கள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

விமான நிலையங்கள் நாட்டின் நிலைத்தன்மையை பாதுகாக்க முக்கிய பங்கு வகிப்பதை குறிப்பிட்டு, எதிர்கால சவால்களை எதிர்கொள்ள திணைக்களத்தின் பொறுப்பும் செயல்பாடுகளும் முக்கியம் என ஜனாதிபதி வலியுறுத்தினார். (ஐ)

## மகனை...

காலமானார்.

இவரின் மகனான ஜெயகாந்தன் கடந்த 2008ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். அவரைத் தேடி வந்த தந்தை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களிலும் பங்கேற்று தனது மகனுக்காக நீதி கோரி போராடி வந்திருந்தார். இந்த நிலையில் தனது மகன் தொடர்பில் எந்தத் தகவல்களையும் அறியாத நிலையில் நேற்று அவர் காலமானார். (ஐ)

## டக்ளஸ்...

வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். அவரை ஜனவரி மாதம் 09ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சஜித்துடன்...

நவீன் திஸநாயக்க ஆகியோர் இதில் பங்கேற்றிருந்தனர்.

"தாய்நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள சவால்களை முறியடிப்பதற்கும் தேசிய இலக்குகளை வினைத்திறனான முறையில் அடைந்து கொள்வதற்குமான புதிய கொள்கை திட்டங்களை வகுப்பது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது", என்று சஜித் பிரேமதாஸ தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"மிகவும் ஆக்கபூர்வமாகவும் பயனுள்ளதாகவும் அமைந்த இந்தக் கலந்துரையாடலில் நாட்டின் எதிர்கால தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய புத்தாக்கமான கொள்கை பரிந்துரைகளை உருவாக்குவதன் முக்கியத்துவம் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது", என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி இணைவு குறித்து பேசப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. எனினும், இரு கட்சிகளின் இணைவு குறித்து விரைவில் பேச்சு நடத்தப்படும் என்று அகில விராஜ் காரியவசம் அண்மையில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஈ.பி.டி.பி...

நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில், பங்கேற்று நியமனக் கடிதங்களை வழங்கி வைத்து, உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக அதிகாரிகள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் நியமனம் பெற்ற குழுத் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இவர்களுக்கான முழுநாள் கருத்தரங்கும் நடைபெற்றது. (ஐ)

## நான் பொய்...

ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்றைய தினம் ஒருங்கிணைப்பு குழு தலைவர் சிறீ பவானந்தாராஜா தலைமையில் நடைபெற்றது. இதில், பங்கேற்றிருந்த அர்ச்சுனா எம். பி., "இலத்திரனியல் உபகரணங்கள் பாதிக்கப்பட்டமைக்கான 50ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுக்கு பதிவு செய்கிறீர்களா?" என்று பிரதேச செயலரிடம் கேட்டார்.

"அந்த விண்ணப்பப் படிவம் இருக்கிறது. ஆனால், அதனை வழங்கவில்லை", என்று பிரதேச செயலர் பதிலளித்தார்.

இதற்கு, "அந்தப் படிவங்களை வழங்கி மக்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குங்கள். தெற்கில் பலர் இந்த கொடுப்பனவுக்கு பதிந்து பணம் பெற்றுள்ளனர். நானும் பழைய ஐபாட் ஒன்றைக் காண்பித்து, அதற்குள் தண்ணீர் போனதாகக்கூறி 50ஆயிரம் ரூபாய் எடுத்தேன். நீங்களும் அவ்வாறு பொய் கூறியாவது அந்தப் பணத்தை எடுங்கள். 300 வீடுகளுக்கு பாதிப்பு என்று கூறி எனக்கு மக்கள் அழைப்பு எடுத்துக் கூறினார்கள். காணொலிகள், படங்கள் எதுவும் தேவையில்லை. உடனடியாக அந்த கொடுப்பனவுகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுங்கள் - என்று அர்ச்சுனா தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த சமூகமட்ட அமைப்பு ஒன்றின் பிரதிநிதி, "குறித்த பதிவுகள் தொடர்பில் மக்களுக்கு சரியான விளக்கத்தை பிரதேச செயலகம் வழங்கவில்லை. கிராம சேவகர்கள் வீடுகளை நேரில் வந்து பார்க்கவில்லை", என்றும் கூறினார். (ஐ)

## பல்கலை...

சங்கத்தின் தலைவர் பேராசிரியர் இ. சர்ஸ்வேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

"பல்கலைக்கழக பீடாதிபதியை தெரிவு செய்வதற்கான 1978 ஆண்டு 16 இலக்க சட்டத்தைத் திருத்தாது புதிய சட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்க முன்வைத்துள்ளது. கல்வி அமைச்சு 49, 51 சரத்துகளை மாத்திரம் திருத்துகிறது. இதனால் பல்கலைக்கழக நடைமுறைகளில் தேவையற்ற மாற்றமும் பீடாதிபதிகளின் தெரிவில் முறைகேடும் ஏற்படும்", என்றார். (ஐ)

## பிரதேச சபை...

அருகே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டில் இருந்து வந்த ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் நபர் ஒருவரிடமிருந்து கஞ்சாவை பெற்று யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வைத்து ஒருவரிடம் கையளிப்பதற்காகவே தான் சென்றார் என்றும் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

அவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகநபரிடம் கஞ்சாவை வழங்கியவர், அதனைப் பெறவிருந்தவர் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அத்துடன், சந்தேகநபரை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சர்வதேச நாணய நிதியக் குழு 2026 முற்பகுதியில் இலங்கைக்கு

## ஐந்தாவது கணக்காய்வை மேற்கொள்வதற்காக

கொழும்பு, டிசெ. 31

**சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழு 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் இலங்கைக்கு வரவுள்ளது. இந்த பயணம், இலங்கைக்கு வழங்கப்படும் நீண்டகால நிதி உதவி திட்டத்தின் ஐந்தாவது கணக்காய்வை செய்யும் நோக்கத்துடன் நடைபெறும்.**

முதலில் இந்த கணக்காய்வு 2025 டிசெம்பர் 15 ஆம் திகதி நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இலங்கை டித்வா புயலுக்குப் பிறகு அவசர நிதி உதவியை கோரி கோரிக்கை விடுத்ததால், கணக்காய்வு 2026ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் நடைபெறவுள்ளது.

சர்வதேச நாணய நிதியம், டித்வா புயலால் ஏற்பட்ட அவசர நிதி தேவைக்கு உடனடி உதவியாக 206 மில்லியன் டொலர்களை அனுமதித்துள்ளது. எதிர்வரும் பயணத்தின் போது நீண்டகால கடனுதவி திட்டம் தொடர்பாக உத்தியோகப்பூர்வ கலந்துரையாடல்கள் மீண்டும் நடைபெறும். (அ)

# புதுவருடத்தையொட்டி கொழும்பில் இன்று விசேட போக்குவரத்து திட்டம்

கொழும்பு, டிசெ.31

**2026 புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக இன்று 31ஆம் திகதி கொழும்பு நகருக்கு, வெளி மாகாணங்களில் இருந்து பெருமளவிலான மக்கள் காலி முகத்திடல் பகுதிக்கு வருகை தருவார்கள் என பொலிஸார் எதிர்பார்க்கின்றனர்.**

எனவே, இதன்போது ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் பொலிஸார் விசேட போக்குவரத்து மற்றும் பாதுகாப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

புத்தாண்டுப் பிறப்பை முன்னிட்டு குறிப்பாக கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, கொம்பனித்தெரு, மருதானை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி மற்றும் கறுவாத்தோட்டம் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், இன்று இந்தப் பொலிஸ் பிரிவுகளில் போக்குவரத்து வழமை போல் இடம்பெறும் என்பதுடன், கடும் நெரிசல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் தேவைக்கேற்ப போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் திட்டத்தின் போது கொழும்பு நகரின் நடைபாதைகளிலோ அல்லது பிரதான வீதிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலோ வாகனங்களை நிறுத்த அனுமதிக்கப்படமாட்டாது.

இவ்வாறான போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடும் சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு கடமைகளுக்காக சுமார் 1,200 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

கொழும்புக்கு வருகை தரும் வாகனங்களை நிறுத்துவதற்காக விசேட வாகன தரிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு சுமார் 5,900 வாகனங்களை நிறுத்துவதற்கான இடவசதிகள் காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஊழலை வெளிச்சம் போட்டு காட்டியதாலேயே துணை பணிப்பாளர் பதவியில் இருந்து நீக்கம்!

## வைத்திய கலாநிதி ருக்ஷான் பெல்லான கருத்து

கொழும்பு, டிசெ.31

தேசிய வைத்தியசாலையில் 900 மில்லியன் ரூபா அளவிலான பாரிய ஊழலை வெளிச்சம் போட்டு காட்டியதாலேயே தன்னை துணை பணிப்பாளர் பதவியில் இருந்து நீக்கியதாக இடைநீக்கம் செய்யப்பட்ட வைத்திய கலாநிதி ருக்ஷான் பெல்லான குற்றம்சாட்டியுள்ளார்.

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரசாயன ரீஜென்ட்கள் காலாவதியடைந்ததும், மாசடைந்ததும் என தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியதை அடிப்படையாக கொண்டு, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கும் குற்றப் புலனாய்வுத் துறைக்கும் முறைப்பாடு செய்த பின்னரே தனக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டிலிருந்து ஒரே நிறுவனத்திடம் உரிய அனுமதியின்றி, அதிக விலையில்,இந்தப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, தினமும் சுமார் 10 ஆயிரம் பரிசோதனைகளில் பயன்படுத்தப்பட்டதாகவும், இதனால் பொது நிதி பெருமளவில் வீணடிக்கப்பட்டதாகவும் வைத்தியர் பெல்லான கூறியுள்ளார்.

ஊழல் தொடர்பாக ஊடகங்களில் கருத்து தெரிவித்ததே தன்னை இடைநீக்கம் செய்ய காரணம் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளதாகவும், அநியாயத்திற்கு எதிராக பேசுவது தன் கடமை எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# 2025ஆம் ஆண்டு பாராளுமன்றில் 26 சட்டமூலங்கள் நிறைவேற்றம்!

கொழும்பு, டிசெ. 31

**2025ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட 26 சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டமூலம், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் உள்ளிட்ட சட்டமூலங்களும் அடங்குகின்றன. (அ)

# சட்டவிரோதமான மாணிக்கக்கல் ஏற்றுமதி செயற்பாடு அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 31

சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கற்களை ஏற்றுமதி செய்யும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

ஹிக்கடுவை பகுதியில் நடைபெற்ற மாணிக்கக்கல் மற்றும் ஆபரண வர்த்தகக் கண்காட்சியொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாணிக்கக்கல் வர்த்தகர்களுக்குத் தேவையான உரிய வசதிகள் கிடைக்காததே இந்த நிலைமைக்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாணிக்கக்கற்கள் மூலம் நாட்டுக்குக் கிடைக்கவேண்டிய முறையான வருமானம் பதிவாவதில்லை. இந்தத் தொழில்துறை ஒரு சுதந்திரமான தொழிலாக இல்லாமல் இருப்பதே இதற்கு காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு இதில் நிலைத்திருக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்துவதை விட, இத்தொழிலின் மீது வெறுப்பை உண்டாக்கும் நிலையே காணப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# மக்களை ஏமாற்றுவதை நிறுத்தவேண்டும் அரசு!

## பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, டிசெ. 31

பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றுவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் பிரிய ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி வழங்கிய நிதி உதவி வாக்குறுதிகள் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு வழங்குவதாகக் கூறப்பட்ட நிதித் தொகை தற்போது கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். பொலிஸ் மா அதிபர்-அரசியல் நலன்களுக்காக அன்றி, பக்கச்சார்பற்ற முறையில் செயல்படுகிறாரா என்பதை நாம் கேள்விக்குட்படுத்த வேண்டும்.

அமைச்சர்கள் மற்றும் எம்.பி.க்களின் சொத்து விபரங்கள் குறித்து தற்போது பேசப்பட்டாலும், அவை எவ்வாறு ஈட்டப்பட்டன என்பது குறித்து மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகின்றது.

மக்கள் பட்டினியால் வாடும் நிலையில், அரசாங்கம் 2700 சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளது. அமைச்சர்களின் ஆடம்பர வாகனங்களை ஏலம் விடுவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று அந்த வாக்குறுதிகளை மறந்துவிட்டனர்.

தனியார் ஊடக நிறுவனங்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவது ஜனநாயகத்திற்கு எதிரானது. அரசாங்கம் உண்மையை மறைக்க முற்படும்போது, மக்கள் தனியார் ஊடகங்களையே நாடுகின்றனர். ஊடகங்களை ஒடுக்குவது ஒரு சர்வாதிகாரப் போக்கையே காட்டுகிறது.

புதிய ஆண்டில் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றுவதை நிறுத்திவிட்டு, நாட்டின் உண்மையான பொருளாதார நிலவரத்தை ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும் என்றார். (அ)

# பிரித்தானியாவின் உயரிய "நைட்" பட்டம் பெற்ற பேராசிரியர் நிஷான் கனகராஜா!

லண்டன், டிசெ. 31

பிரித்தானியாவின் லெய்செஸ்டர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றி வரும், இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் நிஷான் கனகராஜா பிரித்தானிய மன்னரின் 2026-ஆம் ஆண்டிற்கான புத்தாண்டு கௌரவப் பட்டியலில் "நைட்"பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

உயர்கல்வித் துறைக்கு அவர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்பு மற்றும் சமூக உள்ளடக்கல் கொள்கைகளை முன்னெடுத்தமைக்காக இந்த உயரிய விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ். மார்ட்டின் வீதியில் வளர்ந்தவர். யாழ் பரி. யோவான் கல்லூரியின் பழைய மாணவரான இவர், 1985ஆம் ஆண்டு அந்தக் கல்லூரியின் தலைமை மாணவ தலைவராகவும் திகழ்ந்தவர்.

இலங்கையில் தனது ஆரம்பக் கல்வியை முடித்த அவர், பின்னர் பிரித்தானியாவின் புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் தனது இளங்கலை மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றார்.

மூன்று தசாப்த காலத்திற்கும் மேலான இவரது கல்விப் பயணத்தில், பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட பதவிகளை வகித்த அவர், 2019 ஆம் ஆண்டு லெய்செஸ்டர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பொறுப்பேற்றார்.

பிரித்தானியாவின் மிகவும் பன்முகத்தன்மை கொண்ட பல்கலைக்கழகங்களில் ஒன்றை நிஷான் கனகராஜா வழிநடத்தி வருகிறார்.

இவரது தலைமையின் கீழ் மாணவர்களில் 69 வீதம் பேர் சிறுபான்மை இனப் பின்னணியைக் கொண்டவர்களாகவும், 38 வீதம் பேர் பின்தங்கிய பகுதிகளிலிருந்து வந்தவர்களாகவும் உள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் முதல் பெண் மற்றும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த வேந்தரை நியமிப்பதில் முக்கிய பங்காற்றினார்.

ஏதிலிகளுக்கான ஆதரவு மற்றும் சமூக நலத் திட்டங்களில் சர்வதேச ரீதியில் பல கூட்டணிகளை உருவாக்கியுள்ளார்.

இந்த கௌரவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், "யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு தேசத்திலிருந்து வந்த ஒரு சிறுவன், இன்று அரச குடும்பத்தினால் கௌரவிக்கப்படுவது என்பது ஒரு வியக்கத்தக்க பயணம். கல்வியின் மாற்றும் சக்தியினாலும், அது வழங்கும் வாய்ப்புகளினாலுமே இது சாத்தியமானது" என உருக்கமாகத் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.